பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு

இலக்கம் 20, வோட் பிளேஸ்
கொழும்பு 07.

2016.01.01

ஆணைக் குழுச் சுற்றறிக்கை இலக்கம் : 01/2016

பல்கலைக்கழக உபவேந்தர்கள்

வளாக அதிபதிகள்

நிறுவகப் பணிப்பாளர்கள்

வெளிவாரிப் பட்டம் மற்றும் விரிவாக்கல் பாடநெறிகள் நிலையங்கள் (Extension courses Centre) / பிரிவுகள் முகாமைத்துவத்திற்கு மற்றும் வெளிவாரிப் பரீட்சைகளை நடாத்துதல் மற்றும் அதனுடன் தொடர்பான செயற்பாடுகளுக்கான செலுத்துகை சதவீதங்களை தீர்மானிப்பதற்கான வழிகாட்டி

மேற்குறிப்பிடப்பட்ட விடயம் தொடர்பாக 2005.04.26 ஆம் திகதிய 861 ஆம் இலக்க ஆணைக் குழுச் சுற்றறிக்கை மீது தங்களது கவனம் ஈர்க்கப்படுகின்றது.

வெளிவாரிப் பட்டம் மற்றும் விரிவாக்கல் பாடநெறிகள் சம்பந்தமாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவின் நிலைக் குழுவினால் சமர்ப்பிக்கப்பட்ட பரிந்துரைகளைக் கவனத்திற் கொண்டதன் பின்னர் வெளிவாரிப் பட்டங்கள் மற்றும் விரிவாக்கல் பாடநெறிகள் நிலையங்கள் (Extension courses Centre) / பிரிவுகள் (EDP நிலையங்கள் / பிரிவுகள்) முகாமைத்துவத்திற்கு மற்றும் வெளிவாரிப் பரீட்சைகளை நடாத்துதல் மற்றும் அதனுடன் தொடர்பான செயற்பாடுகளுக்கான செலுத்துகை சதவீதங்களை தீர்மானிப்பதற்கான வழிகாட்டிக்கான அங்கீகாரத்தை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழு வழங்கியுள்ளது. அதற்கமைய, தகவலுக்காக மற்றும் இணக்கப்பாட்டிற்காக இந்தச் சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள வழிகாட்டலை பல்கலைக்கழகங்கள் / உயர் கல்வி நிறுவகங்கள் / நிறுவகங்களுக்கு வழங்கப்படுகின்றது.

பரீட்சைகள் மற்றும் அதனுடன் தொடர்பான செயற்பாடுகளுக்கு செலுத்த வேண்டிய உண்மையான கட்டணங்களை, வெளிவாரிப் பட்டத்திற்கான நிலையம் / பிரிவினால் முன்மொழியப்பட்டுள்ள மற்றும் பல்கலைக்கழகத்தின் நிதிக் குழு மற்றும் பொது நிர்வாக சபையினால் அங்கீகரிக்கப்பட்ட வருடாந்த வரவு செலவுத் திட்டத்தை அடிப்படையாகக் கொண்டே தீர்மானிக்கப்படுகின்றது. எனவே, எதிர்பார்க்கப்படும் மொத்த வருமானம் மற்றும் (அ) பொது அலுவல்களுக்கான கட்டணங்கள் (ஆ) பயன்பாட்டுக் கட்டணங்கள் (இ) பல்கலைக்கழகம், பீடம், கற்கைப் பிரிவு மற்றும் கற்கை நிலையங்கள் அபிவிருத்தி நிதியத்திற்கான பங்களிப்புக்காக ஒதுக்க வேண்டிய கட்டுப்பாட்டு குறைப்புக்களைக் கவனத்திற் கொண்டு இங்கு குறிப்பிடப்பட்டுள்ள செலுத்துகைகளுக்கான உச்ச வரையறைகள் , செலுத்த வேண்டிய உண்மையான விகிதங்களைத் தீர்மானிக்கும் வழிகாட்டியாக பயன்படுத்துதல் வேண்டும்.

இந்தச் சுற்றறிக்கையின் ஊடாக விதிக்கப்பட்டிருக்கும் பிரகாரம் சுற்றறிக்கையில் பட்டியலிடப்பட்டிருக்கும் சகல சேவைகள் மற்றும் விடயங்களுக்காக செலுத்துவதற்குத் தேவையான நிதியை வெளிவாரிப் பட்டத்திற்கான நிலையம் / பிரிவினால் ஈட்டப்பட்ட நிதியின் ஊடாகப் பெற்றுக்கொள்ள வேண்டியிருப்பதுடன், இணைக்கப்பட்டிருக்கும் அட்டவணையில் விதிக்கப்பட்டிருக்கும் உச்சளவு வரையறை விகிதம் 2016.01.01 ஆம் திகதி முதல் அமுல்படுத்தப்படுவதுடன், ஏனைய

செலுத்துகைகள் மற்றும் விகிதங்கள் பல்கலைக்கழகம் மற்றும் உலக வங்கியின் 21 ஆம் நூற்றாண்டிற்கான உயர் கல்வித் திட்டத்தின் (WB-HETC) திட்டமிடல் மற்றும் அபிவிருத்திப் பிரிவு (PPDU) என்பவற்றுக்கிடையிலான HETC திட்டம் - வெளிவாரிப் பட்டப் பாடநெறிகளை வழங்குவதற்கான (HETC-EDP) ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்ட திகதி முதல் அமுல்படுத்தப்படும்.

2005.04.26 ஆம் திகதிய 861 ஆம் இலக்க ஆணைக் குழுச் சுற்றறிக்கை இத்தால் இரத்துச் செய்யப்படுகின்றது.

தயவு செய்து இதன் பிரகாரம் நடவடிக்கை மேற்கொள்ளவும்.

ஒப்பம்: பேராசிரியர் மொஹான் த சில்வா

தலைவர்

பிரதிகள்:-

1. செயலாளர், உயர்கல்வி மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு.
2. தலைவர் அலுவலகம், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு.
3. உப தலைவர், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு.
4. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு உறுப்பினர்கள்,
5. செயலாளர், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு.
6. பீடாதிபதிகள்.
7. பல்கலைக்கழகங்களின் பதிவாளர்கள்.
8. கணக்காளர், பல்கலைக்கழகமானியங்கள் ஆணைக்குழு.
9. பல்கலைக்கழகங்களின் நிதிப் பொறுப்பாளர்கள் (Bursars).
10. நூலகர்கள், சிரேஷ்ட உதவி நூலகர்கள், உதவி நூலகர்கள் - உயர் கல்வி நிறுவகங்கள்.
11. பிரதிப் பதிவாளர்கள் /சிரேஷ்ட உதவிப் பதிவாளர்கள்/ உதவிப் பதிவாளர்கள் - உயர் கல்வி நிறுவகங்கள் /வளாகங்கள்.
12. பிரதி நிதிப் பொறுப்பாளரகள் /சிரேஷ்ட உதவிநிதிப் பொறுப்பாளர்கள்/ உதவிநிதிப் பொறுப்பாளர்கள் - உயர் கல்வி நிறுவகங்கள் /வளாகங்கள்
13. பிரதம உள்ளகக் கணக்காய்வாளர், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு.
14. பல்கலைக்கழகங்களின் அரசாங்க கணக்காய்வு அத்தியட்சகர்கள்
15. உயர் கல்வி நிறுவகங்களின் சிரேஷ்ட உதவி உள்ளகக் கணக்காய்வாளர்கள் /உதவி உள்ளகக் கணக்காய்வாளர்கள்.
16. சகல தொழிற்சங்களினதும் செயலாளர்கள்.
17. கணக்காய்வாளர் நாயகம்.

கோப்பு இலக்கம் : UGC/HR/6/2/3/238(EX)

வெளிவாரிப் பட்டம் மற்றும் விரிவாக்கல் பாடநெறிகள் நிலையங்கள் (Extension courses Centre) / பிரிவுகள் முகாமைத்துவத்திற்கு மற்றும் வெளிவாரிப் பரீட்சைகளை நடாத்துதல் மற்றும் அதனுடன் தொடர்பான செயற்பாடுகளுக்கான செலுத்துகை சதவீதங்களை தீர்மானிப்பதற்கான வழிகாட்டி

1. பகுதி நேர அடிப்படையில் நியமிக்கப்பட்டுள்ள நிர்வாகப் பதவிகளை வகிக்கும் கல்விசார் ஆளணிக்கு செலுத்த வேண்டிய படிகள்

பதவி / ஒப்படை	சதவீதம் (ரூபா)
பணிப்பாளர்	அவரது நிரந்தரப் பதவிக்குரிய அடிப்படைச் சம்பளத்தின் 25%
பிரதிப் பணிப்பாளர்	அவரது நிரந்தரப் பதவிக்குரிய அடிப்படைச் சம்பளத்தின் 20%
கற்கைப் பாடநெறி ஒருங்கிணைப்பாளர்	அவரது நிரந்தரப் பதவிக்குரிய அடிப்படைச் சம்பளத்தின் 15%
முகாமைத்துவ சபைக் கூட்டங்கள் (கூட்டமொன்றுக்காக ஒரு அங்கத்தவருக்கு)	2,000.00
கற்கை சபை(கூட்டமொன்றுக்காக ஒரு அங்கத்தவருக்கு)	1,500.00

2. பல்கலைக்கழகங்களின் ஊடாக நடாத்தப்படும் வெளிவாரிப் பட்டப் பரீட்சைகளுக்கான செலுத்துகை வீதங்கள் (உச்ச வரையறை)

2.1 கல்விசார் ஆளணி

	செயற்பாடு	வீதங்கள் (உச்ச வரையறை) (ரூ.) இறுதி /வருடாந்தப் பரீட்சை *1
அ	ஒப்பு நோக்குதல் உட்பட மூன்று மணித்தியாலங்களைக் கொண்ட வினாத் தாளொன்றைத் தயாரித்தல்	2,400.00
ஆ	ஒப்பு நோக்குதல் உட்பட வினாத் தாளொன்றை மொழி பெயர்த்தல்	750.00
இ	மிதப்படுத்தல் / மேற்பார்வை (வினாத்தாளொன்றுக்கு)	1,200.00
ஈ	விடைத்தாளொன்றுக்குப் புள்ளியிடுவதற்காக (ஒரு விடைத்தாளுக்கு) *2	120.00
உ	செயன்முறைப் பரீட்சையொன்றைத் தயார் செய்தல், நடாத்துதல் மற்றும் புள்ளிகளை வழங்குவதற்காக பரீட்சகர் ஒருவருக்கு வழங்கப்படும் இணைந்த படி - 10 பரீட்சார்த்திகளைக் கொண்ட குழுவுக்கு (உச்சளவில் இரண்டு (02) பரீட்சகர்கள்) மூன்று மணித்தியாலங்களுக்காக	2,000.00
ஊ	பாடநெறிக் காலப் பகுதிக்குள் மதிப்பீடுகளுக்காக புள்ளிகளை வழங்குதல் - (பாடநெறி அலகொன்றுக்கு / அரையாண்டுக்காக உச்சளவு இரண்டு (02) ஒப்படைகளுக்காக) கிரடிட் பெறுமதி 2 - 4	ஒரு ஒப்படைக்கு 30.00
எ	கல்விசார் அல்லது ஆராய்ச்சி தொடர்பிலான ஆய்வுக் கட்டுரையை மதிப்பீடு செய்தல் கிரடிட் பெறுமதியின் அடிப்படையில் - ஒப்படை அல்லது செயற் திட்ட அறிக்கை ஊடாக மாத்திரம் பாடநெறியை மதிப்பீட்டுக்குட்படுத்தும் சந்தர்ப்பங்களில் கிரடிட் பெறுமதி 3 - 5	1000.00

	கிரடிட் பெறுமதி 5 இலும் அதிகமான	2000.00
ஏ	ஆய்வுக் கட்டுரை மற்றும் செயற்திட்ட அறிக்கை மேற்பார்வை கிரடிட் பெறுமதியின் அடிப்படையில் கிரடிட் பெறுமதி 3 - 5 கிரடிட் பெறுமதி 5 இலும் அதிகமான	 2500.00 5000.00
ஐ	வாய் மூலப் பரீட்சை (ஒரு மாணவனுக்கு) *3	50.00

*1 அரையாண்டு (செமஸ்டர்) பரீட்சையை நடாத்துவதாயின், இறுதி / வருடாந்த பரீட்சைக்காக அங்கீகரிக்கப்பட்ட சதவீதத்தைப் பயன்படுத்தி 2 ஆம் செமஸ்டருக்காக செலுத்த வேண்டிய மொத்தத் தொகையை வருடாந்தப் பரீட்சைக்கான உயர் வரையறையைத் தாண்டாத வகையில் நிலையத்தின் முகாமைத்துவதற்திற்கு குறிப்பிட்ட விடயத்திற்கான (அ,ஆ,இ,ஈ,உ) சதவீதத்தை தீர்மானித்துக்கொள்ள முடியும்.

*2 கீழ் குறிப்பிடப்பட்டிருக்கும் பிரகாரம் நிச்சயிக்கப்பட்ட கால எல்லைக்குள் குறிப்பிட்ட வினாத் தாளுக்கான புள்ளிகளை வழங்குவதற்காக ஒரு விடைத் தாளுக்காக ரூபா 30.00 வீதம் விசேட படியொன்று பரீட்சகர்களுக்கு செலுத்தப்படும்.

அ) 100 விடைத் தாள்களுக்கு புள்ளிகளை வழங்குதல் - பரீட்சகருக்கு / மதிப்பீட்டாளருக்கு விடைத் தாள்களை ஒப்படைத்த திகதி முதல் ஒரு மாத காலத்திற்குள்

ஆ) 101 - 300 வரையிலான விடைத் தாள்களுக்கு புள்ளியிடல் - பரீட்சகருக்கு / மதிப்பீட்டாளருக்கு விடைத் தாள்களை ஒப்படைத்த திகதி முதல் நான்கு (04) வார காலத்திற்குள்

இ) விசேட கொடுப்பனவைப் பெற்றுக் கொள்வதற்கான உரிமையைப் பெற்றுக்கொள்வதற்கு எந்தவொரு பரீட்சகருக்கு / மதிப்பீட்டாளருக்கு ஒரு பரீட்சைக்காக ஒரே தடவையில் 300 விடைத் தாள்களுக்குப் புள்ளியிடுவதற்கு அனுமதி இல்லை.

*3 பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களின் எண்ணிக்கையின் அடிப்படையில் மொத்தத் தொகையும் பரீட்சகர் குழு அங்கத்தவர்களிடையே பகிர்ந்தளிக்கப்படல் வேண்டும்.

2.2 நிர்வாகம் மற்றும் உதவி ஆளணிக்கான அங்கீகரிக்கப்பட்ட செலுத்தல் வீதம் (உச்ச வரையறை) **1

அ) தட்டெழுத்து /அச்சிடல் / பொதி செய்தல் நடவடிக்கைகளை மேற்பார்வை செய்வதற்கான செலுத்துகைகள்.

	விபரம்	வீதங்கள் (ரூ.)
அ	வினாத் தாள் பற்றிய பொதுவான மேற்பார்வை மற்றும் கையாளுதல் (வழங்கப்பட்ட பரீட்சைக்குரிய ஒரு வினாத் தாளுக்காக)	300.00
ஆ	வினாத் தாள் தட்டெழுத்து செய்வதனை மேற்பார்வை செய்தல் (வழங்கப்பட்ட பரீட்சைக்குரிய ஒரு வினாத் தாளுக்காக)	
இ	ஸ்கேன் / பிரதி செய்தல், பொதி செய்தல் மற்றும் சீல் வைத்தல் (வழங்கப்பட்ட பரீட்சைக்குரிய ஒரு வினாத் தாளுக்காக)	

**1 இந்த சேவைகளை பணிப்பாளர் அல்லது பிரதிப் பணிப்பாளர் அல்லது கற்கைப் பாடநெறி ஒருங்கிணைப்பாளர் ஆகியோரில் ஒருவர் வழங்கும் சந்தர்ப்பத்தில் அவர்களும் இந்தக் கொடுப்பனவுகளுக்கு உரிமை பெறுவதுடன், இங்கு, வெளிவாரிப் பரீட்சைக்குப் பொறுப்பான பிரதிப் பதிவாளர் /சிரேஷ்ட உதவிப் பதிவாளருக்கு செலுத்தக் கூடாது.

ஆ) ஸ்கேன் / பிரதி செய்தல், பொதி செய்தலுக்கான செலுத்துகைகள்

	விபரம்	வீதங்கள் (ரூ.)
அ	விரிவுரையாளரால் ஒரு பக்கத்தை தட்டச்சு செய்வதற்கு உச்சளவு ரூ.540/- வரை (வழங்கப்பட்ட பரீட்சைக்குரிய ஒரு வினாத் தாளுக்காக)	வினாத் தாளின் ஒரு பக்கத்திற்காக ரூபா 90.00 முழு வினாத் தாளொன்றுக்கு ரூபா 540.00
ஆ	எழுதுவினைஞர் /சுருக்கெழுத்தாளர் / இணையான தரத்தைச் சேர்ந்த ஆளணி / அலுவலக உதவியாளர் அல்லது அலுவல் ஒப்படைக்கப்பட்டிருக்கும் நபருக்கு (வழங்கப்பட்ட பரீட்சைக்குரிய ஒரு வினாத் தாளுக்காக) உச்சளவு ரூபா 360/- வரை	வினாத் தாளின் ஒரு பக்கத்திற்காக ரூபா 60.00 முழு வினாத் தாளொன்றுக்கு ரூபா 360.00
இ	பொதியிடல்- எழுதுவினைஞர் /சுருக்கெழுத்தாளர் /இணையான தரத்தைச் சேர்ந்த ஆளணி / அலுவலக உதவியாளர் அல்லது அலுவல் ஒப்படைக்கப்பட்டிருக்கும் நபருக்கு (வழங்கப்பட்ட பரீட்சைக்குரிய ஒரு வினாத் தாளுக்காக)	60.00
ஈ	அச்சிடல் - பிரதிபண்ணல் இயந்திரத்தை இயக்குபவருக்கு (வழங்கப்பட்ட பரீட்சைக்குரிய ஒரு வினாத் தாளுக்காக)	60.00

இ) மேற்பார்வையாளர் / மதிப்பீட்டாளர் மற்றும் ஏனைய ஆளணிகளுக்கான செலுத்துகைகள் (பல்கலைக்கழகம் / உயர் கல்வி நிறுவகங்களுக்குள் அமைக்கப்பட்டுள்ள நிலையங்களில்) *1,2

அ) 04 அல்லது 04 மணித்தியாலங்களுக்குக் குறைவான ஒரு பரீட்சைத் தவணைக்காக பல்கலைக்கழக ஊழியர்களுக்குச் செலுத்தல்

		வெளிவாரிப் பரீட்சை
	விபரம்	கட்டணம் (ரூ.)
1	மேற்பார்வையாளர் *3	2,000.00
2	நிர்வாக ஒருங்கிணைப்பாளர்	1,500.00
3	மதிப்பீட்டாளர்	1,250.00
4	எழுதுவினைஞர்	450.00
5	தொழில்நுட்ப உத்தியோகத்தர்	375.00
6	ஆய்வுகூட உதவியாளர்	325.00
7	மண்டப உதவியாளர்	375.00

*1 பல்கலைக்கழகம் / உயர் கல்வி நிறுவகத்தினுள் ஆனாலும் சாதாரண அலுவல் நேரத்திற்குப் புறம்பாக பரீட்சைகள் நடைபெறும்போது நிலவும் வீதங்களின் பிரகாரம் மேற்குறிப்பிடப்பட்ட ஊழியர்களுக்கு மேலதிக நேர வேலைக் கொடுப்பனவுகளைச் செலுத்தல் வேண்டும்.

*2 பரீட்சையானது பல்கலைக்கழகத்திற்கு / உயர் கல்வி நிறுவகத்திற்கு வெளியே நடாத்தப்படும்போது ஏற்புடையதாகும் சுற்றறிக்கைகளில் குறிப்பிடப்பட்டுள்ள சத வீதங்களின் பிரகாரம் சுய தேவைக் கொடுப்பனவு (Subsistence allowance) மற்றும் மேலதிக நேர வேலைக் கொடுப்பனவுகளைச் செலுத்தல் வேண்டும். ஊழியர் சுய தேவைக் கொடுப்பனவை வேண்டாத சந்தர்ப்பத்தில் இரவு தங்குவதற்கான வசதிகள் தேவையாயின் பல்கலைக்கழகம் அதனை தயார் செய்தல் வேண்டும். உரிய பெறுகை நடைமுறையைப் பின்பற்றி தங்குவதற்குப் பொருத்தமான இடமொன்றை பல்கலைக்கழகம் மேற்கொள்ளல் வேண்டும். அவ்வாறான சந்தர்ப்பங்களில்

நேரடியாக தங்குமிடத்திற்கு செலுத்த வேண்டும் அல்லது குறிப்பிட்ட ஆளணி அங்கத்தவர்கள் சமர்ப்பிக்கும் பற்றுச் சீட்டுக்களின் பிரகாரம் நிர்வாக ஒருங்கிணைப்பாளருக்கு செலுத்துதல் வேண்டும்.

*3 பரீட்சைகள் சபையினால் பெயர் குறிப்பிடப்படும் கல்விசார் ஆளணி அங்கத்தவர் சிரேஷ்ட விரிவுரையாளர் அல்லது அதனை விடவும் உயர்ந்த தரத்தினை உடையவராக இருத்தல் வேண்டும்.

2.3 கல்வி முகாமையாளர்களுக்கான செலுத்துகைகள் - பீடாதிபதி, திணைக்களத் தலைவர் மற்றும் ஏனையவர்கள்(நிலையத்தின் பணிப்பாளர் / பிரதிப் பணிப்பாளர் - பரீட்சைகள்) * 1,2,3

	விபரம்	வெளிவாரிப் பரீட்சை இறுதி / வருடாந்தக் கட்டணம் (ரூ.)
அ	பீடாதிபதி	7,500.00
ஆ	திணைக்களத் தலைவர்	7,500.00
இ	பணிப்பாளர் / வெளிவாரிப் பட்டப் பாடநெறி நிலையம்	10,000.00
ஈ	பிரதிப் பணிப்பாளர் / பரீட்சைகள், வெளிவாரிப் பட்டப் பாடநெறி நிலையம்	10,000.00
உ	நிகழ்ச்சித் திட்ட ஒருங்கிணைப்பாளர்	10,000.00
ஊ	நிகழ்ச்சித் திட்ட ஒருங்கிணைப்பாளர்	7,500.00

* 1 வெளிவாரிப் பரீட்சை சம்பந்தமாக நடவடிக்கை மேற்கொள்ளும் நிலையம் / பிரிவு விடைத் தாள் கட்டுகளை குறிப்பிட்ட பீடங்களின் பீடாதிபதிகள் ஊடாக பரீட்சகரின் திணைக்களத் தலைவர் ஊடாக குறிப்பிட்ட பரீட்சகருக்கு பரீட்சை முடிவடைந்து ஏழு (07) நாட்களுக்குள் அனுப்புதல் வேண்டும்.

* 2 விடைத் தாள்கள் கிடைக்கப் பெற்ற திகதி முதல் மூன்று மாத காலத்திற்குள் பரீட்சகர் அவரது திணைக்களத் தலைவர் மற்றும் குறிப்பிட்ட பீடத்தின் பீடாதிபதி ஊடாக புள்ளிகளை வழங்கி விடைத்தாள்களை வெளிவாரிப் பரீட்சைப் பிரிவுக்கு அனுப்புதல் வேண்டும்.

* 3 பீடாதிபதி, திணைக்களத் தலைவர்கள், பணிப்பாளர், பிரதிப் பணிப்பாளர், கல்வி நிகழ்ச்சித் திட்ட ஒருங்கிணைப்பாளர் மற்றும் பாடநெறி ஒருங்கிணைப்பாளர்கள் கீழ் குறிப்பிடப்படும் 04 நிபந்தனைகளைப் பூர்த்தி செய்தால் மாத்திரமே மேற்குறிப்பிடப்பட்ட கொடுப்பனவுகளைப் பெற்றுக் கொள்வதற்கான உரிமையைப் பெற்றுக்கொள்கின்றார்கள் என்பதனை தயவுடன் கவனத்திற் கொள்ளவும்.

நிபந்தனை - **01**

உங்களது பல்கலைக்கழகம் /வளாகம் /நிறுவகத்தின் ஊடாக நடாத்தப்படும் வெளிவாரிப் பட்டப் படிப்பு / டிப்ளோமா மற்றும் அவற்றுடன் இணைந்த நிகழ்ச்சித் திட்டங்களின் மூலம் ஈட்டிய வருமானத்தின் ஊடாக மாத்திரமே இந்த கொடுப்பனவு வீதங்களைச் செலுத்துதல் வேண்டும்.

நிபந்தனை - **02**

பீடாதிபதிகள், திணைக்களத் தலைவர்கள், கல்வி நிகழ்ச்சித் திட்ட ஒருங்கிணைப்பாளர் மற்றும் பாடநெறி ஒருங்கிணைப்பாளர்கள் தமக்கு விடைத் தாள்கள் கிடைக்கப் பெற்ற திகதி முதல்

உச்சளவு 03 மாத காலத்திற்குள் புள்ளிகளை வழங்கி விடைத் தாள்களை மீள ஒப்படைத்தால் மாத்திரமே கொடுப்பனவுகளைப் பெற்றுக்கொள்வதற்கான உரிமையைப் பெறுகின்றார்கள்.

நிபந்தனை - **03**

நிச்சயிக்கப்பட்ட காலப் பகுதிக்குள் குறிப்பிட்ட விடைத் தாள்களுக்கான புள்ளிகளை வழங்கியமைக்காக பரீட்சகர்களுக்கு ஒரு விடைத் தாளுக்கு ரூபா 30/- வீதமான மேலதிக கொடுப்பனவொன்றைச் செலுத்த முடியும். (<100 விடைத் தாள்களை ஒரு மாத காலத்திற்குள் மற்றும் 101 - 300 வரை 06 வாரத்திற்குள்)

நிபந்தனை - **04**

02 மற்றும் 03 ஆம் நிபந்தனைகளின் நோக்கத்தைப் பூர்த்தி செய்து கொள்வதற்காக ஒரு பரீட்சையின்போது ஒரு பரீட்சகருக்கு ஒரு மாத காலத்திற்குள் உச்சளவாக 300 விடைத் தாள்களை மதிப்பீடு செய்வதற்கு வாய்ப்பு வழங்கப்படுவதுடன், ஒரு விடைத் தாள் பொதியை மீள ஒப்படைத்ததன் பின்னர் மேலுமொரு பொதியை (பெக்கட்) அவருக்கு வழங்க முடியும்.

2.3 வினாத் தாள் மற்றும் விடைத் தாள்களுக்குப் பொறுப்பாக நடவடிக்கை மேற்கொள்பவர்களுக்கான மேலதிக கொடுப்பனவுகள்

விபரம்	வீதம் (ரூ.)
உயர் கல்வி நிறுவனத்திற்கு வெளியே பரீட்சை நடைபெறும்போது வினாத் தாள் மற்றும் விடைத் தாள்களை பாதுகாப்பாக வைத்திருத்தல், மேற்பார்வை மற்றும் 24 மணித்தியாலங்களுக்கு மேலான நேரம் அவ்வாறான வினாத் தாள்கள் / விடைத்தாள்களுக்குப் பொறுப்பாக நடவடிக்கை மேற்கொள்ள வேண்டியேற்படும்போது	ரூபா 2,000.00 (வழங்கப்பட்ட பரீட்சைக்குரிய ஒரு வினாத் தாளுக்காக)

03. வெளிவாரிப் பட்டப் பாடநெறிப் பரீட்சைகளுடன் தொடர்பான பகல் நேர வகுப்புக்கள் /கருத்தரங்குகளுக்கான கொடுப்பனவு வீதங்கள்*[1,2,3,4]

பதவிப் பெயர்கள்	பல்கலைக்கழகத்திற்கு அருகில் (< 20கி.மீ.) (தினமொன்றுக்கு)	வெளியிடங்களுக்கான வீதங்கள் (< 20கி.மீ.) (தினமொன்றுக்கு)	
	வீதங்கள் (ரூ.)	வீதங்கள் (ரூ.)	**இணைந்த படிகள்**
பணிப்பாளர் / பிரதிப் பணிப்பாளர் / கருத்தரங்கு ஒருங்கிணைப்பாளர்	3,000.00	6,000.00	தூரத்தினை அடிப்படையாகக் கொண்டு செலுத்தப்படும்.
விரிவுரையாளர் (மூன்று மணித்தியாலங்கள் விரிவுரை நடாத்துதல்)	6,000.00	9,000.00	
பிரதி/சிரேஷ்ட / உதவிப் பதிவாளர் வெளிவாரிப் பரீட்சைகள்	1,500.00	2,500.00	
எழுதுவினைஞர்	1,000.00	2,000.00	
மண்டப உதவியாளர்	650.00	1500.00	
சாரதி	700.00	1800.00	

*1 பரீட்சைகள் / கருத்தரங்குகள் / செயலமர்வுகள் / பகல் நேர வகுப்புக்கள் / பாட வகுப்புக்களுக்கு போக்குவரத்து வசதிகளை அவ்வாறான செயற்பாடுகள் பல்கலைக்கழகத்திற்கு வெளியில் நடைபெறும்போது ஏற்படுத்திக் கொடுத்தல் வேண்டும்.

* 2 கல்விசார் மற்றும் கல்வி சாரா ஆளணிக்கு பயணச் செலவுகள் மற்றும் சுய தேவைக் கொடுப்பனவுகள் அல்லது பரீட்சைகள் / பகல் நேர வகுப்புக்கள் / பாட வகுப்புக்கள் / கருத்தரங்குகள் என்பவற்றை நடாத்துவதற்கான அலுவலுக்கான கொடுப்பனவு ஆகிய இரண்டில் ஒன்றைச் செலுத்த முடியும்.

விரிவுரையாளர்களுக்கான போக்குவரத்து வசதிகளை வழங்கும்போது தமது போக்குவரத்து ஊடகத்தைப் பயன்படுத்துவதற்காக வெளிவாரி பட்டப் படிப்பு நிலையத்தின் பணிப்பாளரின் முன் அனுமதியைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

* 3 கருத்தரங்கொன்று நடாத்தப்படும் கால எல்லையானது ஆறு மணித்தியாலங்களை விடவும் குறையாத அல்லது 03 மணித்தியாலங்களைக் கொண்ட இரண்டு அமர்வுகளைக் கொண்டதாக இருத்தல் வேண்டும்.

* 4 கல்வி சாரா ஆளணிக்கு இணைந்த படிகள் அல்லது சுய தேவைக் கொடுப்பனவுகள் நிலவும் வீதங்களுக்கமைய செலுத்தப்படும்.

04. HETC - EDP திட்டங்களின் உதவியின் கீழ் தலைமை ஒருங்கிணைப்பாளர் மற்றும் அலுவல் ஒருங்கிணைப்பாளர்களுக்கு கொடுப்பனவைச் செலுத்தல்.

ஒருங்கிணைப்பாளர் மற்றும் அலுவல் ஒருங்கிணைப்பாளருக்கு நிதிசார் கொடுப்பனவொன்றைச் செலுத்துவதற்கான நிதியை 21 ஆம் நூற்றாண்டிற்கான உயர் கல்வித் திட்டத்தின் (HETC) உதவி ஊடாக வழங்கப்படுவதில்லையென்பதனால் செயற் திட்டத்திற்கான கால எல்லைக்குள் ஈட்டிய நிதியைப் பயன்படுத்தி கீழ் குறிப்பிடப்படும் மாதாந்த வீதத்தை ஏற்படுத்திக் கொள்வதற்கு பரிந்துரை செய்யப்படுகின்றது.

பதவி	வீதங்கள் (ரூ.)
EDP ஒருங்கிணைப்பாளர்	5,000.00
EDP அலுவல் ஒருங்கிணைப்பாளர்	4,000.00

<u>குறிப்பு</u>

- இந்த ஆவணத்தில் பத்திரம் எனப் பயன்படுத்தப்பட்டிருப்பது வழங்கப்பட்ட பரீட்சை வினாத்தாளையாகும்.
- இந்த ஆவணத்தில் பொதி எனக் குறிப்பிடப்பட்டிருப்பது 100 விடைத் தாள்களைக் கொண்ட பொதியையாகும்.
- இந்த வீதம் பல்கலைக்கழக ஊழியர்களுக்கு 03 - 04 மணித்தியால காலத்திற்காக அங்கீகரிக்கப்பட்டுள்ளது.